<u>20–வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம்,</u>
<u>சென்னை – 03.</u>

தேதி 20.07.2026

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | – | S.T.C.No.152 /2026 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | எ.சா.ஆ 1 |
| பெயர் | – | கோகுலகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | – | |
| முகவரி | – | |
| வயது | – | |

2023–ம் வருடத்திய பாரதிய சாட்சிய அதிநியம் படி இன்று 20.07.2026 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். எதிரி ஆஜர்.)

**<u>நேரம்</u> :** 03.10 மணி.

**<u>முதல் விசாரணை</u>**

1) மாருதி நிறுவனத்தில் நான் தொழில்ரிதியான எரிவாயு வாங்கி விற்றுவந்தேன். 2021 அக்டோபர் மாதத்தில் மேற்கண்ட தொழிலை தொடங்கினேன். என் மூலமாக மேற்படி மாருதி நிறுவனம் சில நிறுவனங்களுக்கு எரிவாயு விநியோகித்து வந்தது. அவ்வாறு விநியோகிப்பதற்கு ஒரு சிலிண்டருக்கு ரூ 100/– முதல் ரூ 300/– வரை எனக்கு தரகு பணம் பேசப்பட்டது. என்னால் விநியோகிக்கப்பட்டு சிலிண்டர்களுக்கு அந்தந்த நிறுவனங்கள் பணம் தரவில்லை என்றாலோ கால தாமதம் ஏற்பட்டாலோ நான் பொறுப்பு என்று நான் எப்பொழுதும் ஒப்புக்கொள்ளவில்லை. நான் வைப்புக்தொகைக்காக வேண்டி தொழில் தொடங்கும்போது பொறுப்புறுதிக்காக மாருதி நிறுவனத்திற்கு 8 காசோலைகள் வழங்கியிருந்தேன். அந்த காசோலை பெடரல் வங்கி ஸ்ரீ பெரும்புதூர் கிளையில் எனது வங்கி கணக்கிலிருநந்து வரையப்பட்டது அதன் எண்கள் 128811 முதல் 128818 வரை ஆகும்.

2) நான் மாருதி நிறுவனத்திற்கு கொடுக்கவேண்டிய தொகை ஏதும் இல்லை. நான் வைப்புதொகையாக கொடுத்தப்பணம் மற்றும் என்னுடைய தரகுபணம் ஆகியவற்றை மாருதி நிறுவனம் எனக்கு தரவில்லை. மேற்படி தொகைகளை என்னால் அருதியிட்டு கூறயியலவில்லை அதற்கான கணக்கு வழக்குகள் மாருதி நிறுவனத்திடம் உள்ளது. என்னுடைய வைப்புதொகை மற்றும் தரகு தொகைகளை கேட்டபோது சரிபார்த்து கூறுவதாக சொன்னார்கள் ஆனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். என்னுடைய வழக்கினை நிருபிக்கும் வகையில் எனகு தரப்பு ஆவணமாக ஜி.கே டிரான்போர்ட்ஸ்யின் ஜி.எஸ்.டி பதிவு சான்றிதழையும், இணையத்தில் இருந்து இறக்கம் செய்யப்பட்ட ஜி.எஸ்.டி கணக்கு விவரத்தினையும், பெடரல் வங்கி கணக்கு எண் 16100200005536 என்பதன் 16.10.2021 முதல் 29.04.2026 வரையான காலகட்டத்திற்கு உண்டாக கணக்கு விவர பட்டியலையும் பாரதிய சாட்சிய ஆதிநியம் 2023 பிரிவு 63 (4) (c) –ன் கீழ் உரிய சான்றுடன் தாக்கல் செய்து கொள்கிறேன். மேற்படி 3 ஆவணங்களும் முறையே எ.சா.ஆ.1 முதல் 3 ஆக கூறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு என் மீது போடப்பட்ட பொய் வழக்காகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

20–வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை–03.